பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

அன்பளிப்பு

# உதயன்

விலை ரூபா 6-00

கடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 சித்திரை 05 புதன்கிழமை (17-04-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 141

# கொழும்பு துறைமுகத்துக்கு 24 மணி நேரப் பாதுகாப்பு!

## புலிகளின் தாக்குதலை அடுத்து விசாரணைக்குழு நேற்று சிபார்சு

கொழும்பு: ஏப்ரல் 17

கொழும்புத் துறைமுகத்திற்கு 24 மணி நேரக் கடும் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும்—

பாதுகாப்பு நடவடிக்கைகளை சரிவர மேற்கொள்வதற்குத் தேவையான நவீன சாதனங்களை கடற்படையினருக்கு வழங்க வேண்டும் என்றும் —

துறைமுகத்தின் பாதுகாப்பை வலுப்படுத்துவது குறித்து ஆராய்ந்த அறுவர் கொண்ட குழு நேற்று அமைச்சர் அஷ்ரப்பிடம் சமர்ப்பித்த அறிக்கையில் சிபார்சு செய்துள்ளது.

கடந்த வெள்ளியன்று புலிகள் நடத்திய தாக்குதலை அடுத்து இந்தக் குழு நியமிக்கப்பட்டது.

துறைமுகப் பகுதிக் கடற்கரையில் கண்காணிப்பு காவல் கோபுரங்களை உடனடியாக அமைக்க வேண்டும் என்றும் இக்குழு சிபார்சு செய்துள்ளது.

துறைமுக அதிகார சபையின் தலைவர் பி. எச். ஜயவர்த்தனா இக்குழுவின் தலைவராகப் பணிபுரிந்தார். (அ)

## அனுமதியின்றி உள்ளே செல்லும் கப்பல்கள் மீது சுடுமாறு உத்தரவு

கொழும்புத் துறைமுகத்துக்கு வெளியே 4 மைல் தூரத்துக்கு அமுல் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு வலயத்துக்குள் அனுமதியின்றி உட்செல்லும் மீன்பிடி வள்ளங்கள் உட்பட கப்பல்களை கண்டவுடன் சுடுமாறு படையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

முன் கூட்டியே அனுமதி பெற்ற கப்பல்கள் மட்டுமே துறைமுகத்துக்குள் அனுமதிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை துறைமுகம் விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானதை அடுத்தே இந்தப் புதிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக நேற்றைய கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன. (அ-3)

# 2 ஆவது நாளாக நேற்று மக்கள் திரண்டு அஞ்சலி

## இன்று வடமராட்சியில் ஊர்தி பவனி

வடமராட்சி கிழக்கு, ஏப். 17

கொழும்புத் துறைமுகத்துக்குள் ஊடுருவி வீரகாவியம் படைத்த 9 கடற் கரும்புலிகளுக்கு நேற்று இரண்டாவது நாளாக மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

9 கடற் கரும்புலிகளின் உருவப் படங்கள் தாங்கிய கப்பல் வடிவிலான ஊர்தி நேற்று தாளையடியில் இருந்து புறப்பட்டு இரவு பருத்தித்துறை கிராமக் கோட்டுச் சந்தியைச் சென்றடைந்தது.

இன்று புதன்கிழமை ஊர்தி பவனி பருத்தித்துறையில் இருந்து புறப்பட்டு வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, நெல்லியடிப் பகுதிகளைச் சென்றடையும்.

வடமராட்சி கிழக்கில் நேற்று ஊர்தி பவனி இடம்பெற்றபோது வீதியின் இருமருங்கிலும் மக்கள் திரண்டு நின்று [illegible] அஞ்சலி செலுத்தினர்.

வீதிகளில் சிவப்பு, மஞ்சள், நீல நிறக் கொடிகள் பறக்க விடப்பட்டு மகரதோரணங்களும் கட்டப்பட்டிருந்தன. அத்துடன் இம் மாவீரர்களின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு தீபம் ஏற்றப்பட்டு மலரஞ்சலிகளும் செலுத்தப்பட்டன. (இ-173-15-36-117)

## வடக்கே இருந்து சென்ற பயணிகளும் தடுத்துவைப்பு

### வேப்பங்குளத்தில் 2 ஆயிரம் பேர்

சாவகச்சேரி, ஏப். 17

வடபகுதியில் இருந்து வவுனியாவுக்கு அப்பால் செல்லவுள்ள 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட பயணிகளை ஸ்ரீலங்கா படையினர் வேப்பங்குளம் முகாமில் தடுத்து வைத்துள்ளனர்.

கடந்த ஐந்து தினங்களுக்கு மேலாக இவர்கள் தடுத்து வைக்கப்பட்டு பொலிஸாரால் விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

பொலிஸ் பதிவுச் சான்றிதழ்களுடன் சென்றவர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

வேப்பங்குளம் முகாமில் போதிய வசதிகள் இல்லாததால் அங்கு தங்கியுள்ள மக்கள் பெரும் துன்பங்களை அனுபவிக்கின்றனர்.

இதேவேளை - தெற்கில் இருந்து வடக்கே வருவதற்காக வவுனியா வந்தவர்களும் அங்குதடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## மேஜர் ஜெனரல்களாக மூவருக்கு பதவி உயர்வு

கடந்த டிசம்பர் மாதம் வலிகாமத்தில் இடம்பெற்ற 'சூரியப்பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையின்போது மூன்று பிரிவுகளை வெற்றிகரமாக நடத்திச்சென்ற மூன்று பிரிகேடியர்களை ஜனாதிபதி சந்திரிகா மேஜர் ஜெனரல் தரத்துக்கு பதவி உயர்த்தியுள்ளார்.

றிசேர்வ் தாக்குதல் படை அதிகாரி ஜனக பெரேரா—

யாழ்ப்பாணம் 52 ஆம் படைப் பிரிவு அதிகாரி பி. ஏ. கருணாதிலக்க—

யாழ்ப்பாணம் 51 ஆவது படைப்பிரிவு அதிகாரி நீல் டயஸ் — ஆகியோரே பதவி உயர்வு பெற்றவர்களாவர்.

அதேசமயம் பிரிகேடியர் நிகால் ஜெயக்கொடி பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமையக பிரதம அதிகாரியாக ஏப்ரல் முதலாம் திகதியில் இருந்து செயற்படும் வகையில் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். (இ-3)

## வடக்கு - கிழக்கு தமிழரின் பாரம்பரிய பிரதேசம்

### லிபியத் தூதுவர் தெரிவிப்பு

வடக்கு - கிழக்கு பிரதேசம் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம் என்பதை நாம் அங்கீகரிக்கின்றோம். ஆனால் இது ஐக்கிய இலங்கைக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

இப்படிக் கூறியுள்ளார் இலங்கைக்கான லிபியா நாட்டுக் கவுன்ஸிலர் அப்துல் ஹமிட் அல்மாண்டி.

1986 ஆம் ஆண்டில் அமெரிக்கா லிபியாவில் மேற்கொண்ட நடவடிக்கையின் 10 ஆம் ஆண்டை நினைவு கூரும் முகமாக லிபியத் தூதரகம் ஏற்பாடு செய்த நிகழ்ச்சிகள் தொடர்பாக நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இப்படிக் கூறினார்.

இலங்கையில் அமைதியும், சமாதானமும் ஏற்பட வேண்டும். இலங்கையின் ஐக்கியத்துக்கு உதவ சந்தர்ப்பம் கிடைக்குமாயின் லிபியா உதவத் தயாராகவிருக்கிறது என்றும் — அவர் கூறினார். (இ-3)

## மேலும் 2 மீனவரை புலிகள் விடுவித்தனர்

வடமராட்சி, ஏப். 17

விடுதலைப்புலிகளின் பாதுகாப்பில் இருந்த மேலும் இருவர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

மாத்தறை மிரிஸ்ஸவைச் சேர்ந்த எல். ஜே. பி. ரூபசிறி (46 வயது), திருகோணமலை, பாலையூற்றைச் சேர்ந்த ரி.எச் பிரேமசிறி (44 வயது) ஆகிய இருவருமே விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

இவர்களில் மாத்தறைப் பகுதி மீனவர் 93 ஆம் ஆண்டிலும், திருகோணமலை மீனவர் 94 ஆம் ஆண்டிலும், முறையே பருத்தித்துறை, நாயாறு கடல் பகுதிகளில் வைத்து பிடிக்கப்பட்டிருந்தனர்.

விடுதலையான இந்த இரு மீனவர்களும் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவினரால் ஹபரண கப்பலில் நேற்று பிற்பகல் பருத்தித்துறையிலிருந்து திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (இ-172)

## மீராவோடைக் கிராமம் படையினரால் அழிப்பு!

தமிழ் மக்கள் முற்றாக வெளியேறியுள்ள மட்டக்களப்பின் மீராவோடைக் கிராமம் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. சுமார் 150 வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

பாரம்பரியமாக நீண்டகாலமாக தமிழர்கள் வாழ்ந்து வந்த மீராவோடைக் கிராமம் தற்போது மக்களின்றி வெறிச்சோடிக் காணப்படுகின்றது.

அங்கிருந்த மக்கள் வாழைச்சேனையில் அகதி முகாமில் பல்வேறு நெருக்கடிகளின் மத்தியில் வாழ்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மீராவோடைக்கு மீளவந்து குடியேறுமாறு அப்பகுதி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி தமிழ் மக்களைக் கேட்டுள்ளார். இதனை மக்கள் ஏற்க மறுத்துள்ளனர். (இ-8)

## இ. தொ. கா. திட்டமிட்டபடி வேலை நிறுத்தம் செய்யும்

### சமரச முயற்சிகள் தோல்வி

கொழும்பு, ஏப். 17

தோட்டத் தொழிலாளரின் சம்பள உயர்வு மற்றும் 300 நாள் வேலை என்ற கோரிக்கைகளுக்கு தோட்ட நிர்வாகம் இணங்க மறுத்துள்ளதால் திட்டமிட்டபடி எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் அடையாள வேலை நிறுத்தம் நடைபெறும் என்று இ. தொ. கா. தகவல் பணிப்பாளர் பீ. அந்தோணிமுத்து நேற்றுத் தெரிவித்தார்.

ஜனாதிபதியும் அமைச்சர் தொண்டமானும் நடத்திய பேச்சுக்களின் பயனாக ஜனாதிபதி பெருந்தோட்ட அமைச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## துறைமுக தாக்குதல் ஒளிவீச்சில்

சாவகச்சேரி, ஏப்: 17

கொழும்பு துறைமுகத்துக்குள் கடற் கரும்புலிகள் நடத்திய தாக்குதல் தொடர்பான காட்சிகள் ஒளி வீச்சில் இடம் பெற உள்ளன.

நிதர்சனம் நிறுவனத்தால் வெளியிடப்படும் ஒளிவீச்சு வீடியோ சஞ்சிகையின் ஏப்ரல் மாத வெளியீட்டில் இக் காட்சிகள் இடம்பெறும் என தெரிவிக்கப்படுகின்றது.

நிதர்சனம் நிறுவனம் தனது சிறப்பு வெளியீடாக உயிராயுதம் நான்கை இன்று வெளியிடுகின்றது: (இ-8)

## கல்முனையில் மின்மாற்றி தகர்ப்பு

கொழும்பு, ஏப். 17

கல்முனையில் கடந்த ஞாயிறன்று இரவு மின்மாற்றி ஒன்றை இனந்தெரியாதவர்கள் குண்டுவைத்து தகர்த்துவிட்டதாக பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது. (இ-3)

## விமானம் நோட்டம்

சாவகச்சேரி, ஏப். 17

வலிகாமம் இழக்கு, வடமராட்சி மேற்குப் பகுதிகளை உள்ளடக்கியவாறு விமானப் படையினரின் குண்டுவீச்சு விமானம் ஒன்று நேற்று பல தடவை வட்டமிட்டு பறந்து சென்றது. (இ-36-117-15)

## முல்லைத்தீவில் மோதல்

சாவகச்சேரி, ஏப். 17

கடந்த 14 ஆம் திகதி முல்லைத்தீவு இராணுவ முகாம் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் ஒன்று இடம்பெற்றது.

இதன் போது ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவில்லை. (இ-8)

## இன்று முதல் பாடசாலைகள் முழு அளவில்

வடமராட்சி, ஏப்: 17

ஆண்டு 2 தொடக்கம் 11 ஆம் ஆண்டுவரையிலான புதிய கல்வியாண்டு இன்று புதன்கிழமை முதல் வடமராட்சி, தென்மராட்சிப் பாடசாலைகளில் ஆரம்பமாகின்றன.

ஆண்டு ஒன்றுக்கான புதிய கல்வி ஆண்டு கடந்த முதலாம் திகதி முதல் ஆரம்பமானது. சாதாரணதர, உயர்தர வகுப்புகளுக்கான கல்வி

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய 200 கலன் நீர் கொள்வனவுடைய மஸ்கன்ஸ் தொட்டியும், சிங்கர் 14'' கலர் T. V யும் விற்பனைக்கு உண்டு. V. தனபாலசிங்கம், நுணாவில் மேற்கு, சாவகச்சேரி. (41392)

இரட்டை மாட்டு வண்டிலும், மாடுகளும் விற்பனைக்குண்டு. க. மகேந்திரன், முருகன் கோவிலடி, கைதடி—நாவற்குழி, கைதடி. (பழைய பண்ணையார் வீடு). (31391)

## வாடகைக்கு

பொருள்கள் வாடகைக்கு கொடுக்குமிடம்: பீங்கான், ரம்லர், தண்ணீர் ரம்லர், ஐஸ்கிறீம் கப்ஸ். பிளாஸ்ரிக் பாய்கள், சில்வர் றே, கறி வாளிகள், கறி டிஸ்கள், பந்திப்பாய், கிடாரங்கள், சமையல் பாத்திரங்கள், தண்ணீர் பரல் இன்னும் பல. வெள்ளை மாளிகை, பெரிய அரசடி, சங்கத்தானை. (41147)

**OL**
**YEAR 10, 9**
வகுப்புக்கள் ஆரம்பம்
**16 — 04 — 96**
3 மணி
**புதிய உயர் கல்லூரி**
(அரசினர் வைத்தியசாலை முன்பாக)
வினாசித்தம்பி லேன்,
சாவகச்சேரி.
(41384)

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை
# பதவி வெற்றிடங்கள்

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் அட்டவணைப்படுத்தப்படாத பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்பும் வகையில் கோரப்பட்ட தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை இப் பிரதேச சபையால் விநியோகிக்கப்படும் படிவத்தில் தயாரித்துப் பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ **26-04-1996** ஆம் திகதிக்கு முன்பாக "விசேட ஆணையாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை" என்னும் முகவரியில் சேர்த்தல் வேண்டும். எக்காரணம் கொண்டும் குறித்த திகதிக்குப் பின்பு கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

## வேண்டப்படும் தகைமைகள்:

1. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும், 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை பொருந்தாது.
3. சிறந்த நல்லொழுக்கமும், தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை நிர்வாகப் பிரதேசத்தில் நிரந்தரமாக வதிபவராக இருத்தல் வேண்டும். (பச்சிலைப்பள்ளியிப் பிரதேச சபையில் கடமை புரிபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்).
5. பதவியினரின் துறைசார்ந்த அனுபவம், அறிவு ஆகியவை மேலதிக தகைமையாக கருதப்படும்.

| பதவி | பால் | கல்வித் தகைமை |
|---|---|---|
| 1. வருமான மேற்பார்வையாளர் | ஆண் | க. பொ. த. சாதாரண தரத்தில் ஆகக் குறைந்தது மொழி, கணிதம் உட்பட ஆறு பாடங்களில் இரு அமர்வுக்கு மேற்படாமல் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 2- நூலக சேவகர் | ஆண்/ பெண் | ஆகக் குறைந்தது 8 ஆம் தரத்தில் சித்தி. |
| 3. காவலாளி | ஆண் | ஆகக் குறைந்தது 8 ஆம் தரத்தில் சித்தி. |
| 4. ஆயுள்வேத தொழிலாளர் | ஆண்/ பெண் | ஆகக் குறைந்தது 8 ஆம் தரத்தில் சித்தி. |
| 5. வீதித் தொழிலாளர் | ஆண்/ பெண் | ஆகக் குறைந்தது 5 ஆம் தரத்தில் சித்தி. |
| 6. கூட்டுத் தொழிலாளி | ஆண்/ பெண் | ஆகக் குறைந்தது 5 ஆம் தரத்தில் சித்தி. |

ஒப்பம். பா. செந்தில்நந்தனன்,
விசேட ஆணையாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,
பளை.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,
பளை, 15-04-1996
(சி/4197)

# நிதித்துறை அறிவித்தல்
# வைப்பகத்திற்கு வருக

கீழ்க்குறிப்பிடுவோரை கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமை (19-04-96) காலை 10.00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு நிதித்துறை கோரியுள்ளது.

★ நாகராணி குணரட்ணம் — சந்தைவீதி, காங்கேசன்துறை.
★ முத்தையா இராசரத்தினம் — 61, சங்கிலியன் வீதி, நல்லூர்.
★ முத்தையா சுந்தரம்பிள்ளை — 61, சங்கிலியன் வீதி, நல்லூர்.
★ ஞானமலர் மதியாபரணம் — 52/27, லோட்டஸ் வீதி, வண்ணார்பண்ணை.
★ சந்திராலோஜினி கணபதிப்பிள்ளை—பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்.
★ A. பாலச்சந்திரன்— மே/பா சின்னத்தம்பி மகாலிங்கம், ராஜ வீதி, கோப்பாய் தெற்கு.
★ பொன்னம்பலம் கைலாயபிள்ளை — மே/பா. கந்தையா ஜெயராம், புத்தூர் கிழக்கு.
★ மேரி சுசிலா ஸ்ரனிஸ்லாஸ் — சந்தை வீதி, சங்கானை.
★ ஐயாத்துரை திருவாசகநாதர்—136/4, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
★ சதாசிவம் பாலகிருஸ்ணன் — தபாற்கந்தோர், சுன்னாகம்.
★ சண்முகம் யோகநாதன் அல்லது சண்முகம் சிவகுருநாதன் —இலங்கை வங்கி ஒழுங்கை, சுன்னாகம் தெற்கு.
★ யோகமலர் பேரின்பநாயகம் — விதானையார் ஒழுங்கை, கோப்பாய் தெற்கு.
★ பூரணம் செல்லையா அல்லது வீரசிங்கம் செல்லையா — குப்பிளான் சந்தி, குப்பிளான்
★ முருகேசு தம்பையா — சீரணி நாகம்மாள் கோவிலடி, சண்டிலிப்பாய் தெற்கு.
★ பெ. ஜீன் ஒலிவற் — 48/2, சென் செபஸ்ரியான் வீதி, பாஷையூர்.
★ சிவசம்பு சிவநேசன் — ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.
★ நடராசா ஞானபாலசிங்கம் — கல்யாணி வீதி, கோண்டாவில் வடக்கு.
★ பரமேஸ்வரி பாலசுப்பிரமணியம் — மடத்தடி வீதி, சிறுப்பிட்டி வடக்கு.
★ கணபதிப்பிள்ளை முத்தையா— ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.
★ அன்னலட்சுமி சிவரத்தினம் — "துவாரனலேன்" கோண்டாவில் வடக்கு.
★ செல்லப்பா இளையதம்பி — வட்டு கிழக்கு, சித்தன்கேணி.
★ எஸ். அன்ரன் லூசியா — 6, கொண்டி வீதி, குருநகர்.
★ செல்லையா கந்தையா— ஆனந்தா வீதி, மானிப்பாய் வடகிழக்கு, மானிப்பாய்.
★ ஆரோக்கியநாதர் பேரின்பநாதன்—உயரப்புலம், ஆனைக்கோட்டை.
★ ஆறுமுகம் சிவராசா அல்லது இந்திராணி—மே/பா வைத்திலிங்கம், பசுவதி வீதி,மறவன் புலவு,(36, பாரதி வீதி, யாழ்ப்பாணம்).
★ சுபத்திரா கந்தையா — மானிப்பாய் தெற்கு, மானிப்பாய்.
★ சிவபாக்கியம் தம்பிமுத்து — பழைய தபாற்கந்தோர் வீதி, உதயவாசம், கோப்பாய் தெற்கு.
★ கனகரத்தினம் ஞானசுந்தரம் — உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.
★ செல்லையா சிவராசா (சிவா) — 62/12, நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறை.
★ செல்வரத்தினம் மகேந்திரன் (பவா)—488, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
★ ரஞ்சிதமலர் இரத்தினசிங்கம்—முதலியார் கோவிலடி, அளவெட்டி வடக்கு.
★ சின்னத்தம்பி வைரவி — கராஸ் லேன், சண்டிலிப்பாய்.
★ கமலா ரவீந்திரன் — 8/5, சென்ரர் மத்திய கிழக்கு வீதி, குருநகர்.
★ செபமாலை கொறுன்லுஸ் (காலூஸ்) — 17, மூன்றாம் குறுக்குத்தெரு, குருநகர்.
★ இராசையா சிவநேசன் — ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.
★ கபிரியல் விக்ரர் — 33/1, முதலாம் குறுக்குத் தெரு, பாஷையூர்.
★ செல்லர் கந்தசாமி — 'கௌரி இல்லம்', ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை.
★ வேலுப்பிள்ளை குலசிங்கம் — வட்டு கிழக்கு, சித்தன்கேணி.
★ தனேஸ்வரி சண்முகராசா — பெரிய நாவலடி, கொடிகாமம்.
★ இராசமணி கோவிந்தபிள்ளை — இல. 82/9, கண்டி வீதி, புங்கன்குளம்.
★ செல்வக்குமாரி லோகநாதன்— இல. 46/4, ஆள்காட்டி வீதி, அரியாலை.
★ பொன்னுத்துரை நல்லதுரை — இல: 82/6, கண்டி வீதி, புங்கன்குளம்.
★ இராசலட்சுமி மகேஸ்வரன் — இல. 39, கச்சேரி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
★ அப்புக்குட்டி ஐயாம்பிள்ளை — உச்சி ஓடை, மானிப்பாய் வடக்கு.
★ பாஸ்கரலிங்கம் பார்த்தீபன் — 'கோகுலம்' சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்.
★ சின்னத்தம்பி கனகரத்தினம் அல்லது கனகரத்தினம் நகுலேஸ்வரன் —சந்தை ஒழுங்கை, மானிப்பாய்.
★ நடராஜா ஸ்ரீகாந்தன் — பலாலி வீதி, கோண்டாவில்.
★ மனோரஞ்சிதம் பொன்னுத்துரை —மதவடி வீதி, கோண்டாவில் கிழக்கு.
★ இரத்தினசிங்கம் கிருஸ்ணதுரை — பிரதான வீதி, பண்ணாகம் தெற்கு.

(வளரும்)

# தட்டச்சு இயந்திரம் உடன் தேவை

நல்ல நிலையிலுள்ள தமிழ் தட்டச்சு இயந்திரம் உடன் தேவை.

தொடர்பு கொள்ளவும்
உதயன் பணிமனை,
சரசாலை,
சாவகச்சேரி.

**JAFFNA NEW SCIENCE ACADEMY**
ஐயாகடை சந்தி, மீசாலை.
**96 AL PURE/APPLIED MATHS**
திரு. குணசிங்கம்
ஆரம்பம் :- **18-04-96** வியாழன் 5 P.M
(41542)

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு: 27 — 01 — 1935
உதிர்வு: 10 — 05 — 1994

**அமரர் இராஜம் கதிர்காமத்தம்பி**
அருணர் வளவு, அல்வாய் மேற்கு
திதி: 17 - 04 - 1996

சொந்த மண் விட்டு இந்த மண் வந்தாலும் பந்தமும் பாசமும் பற்றியே நிற்குதம்மா. வானுலகம் புகுந்த எம் அன்னையே கானகத்தருகிருந்து உங்களை வணங்குகின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்புக் கணவன்,
மகள் வசந்தா,
மகன் சபா,
மருமகன், பெறாமக்கள்.

முருகன் வீதி,
இராமநாதபுரம்.
(40429)

# முக்கிய அறிவித்தல்

சகல மாலை நேர வகுப்புக்களையும் நிறுத்தி, கொழும்புத்துறைமுகத் தாக்குதலில் வீரகாவியமான 9 கரும்புலிகள் நினைவாக **17-04-96** புதன்கிழமை நெல்லியடியில் நடைபெறவிருக்கும் நிகழ்வுகளில் கலந்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
வடமராட்சி.
(41544)

# விஞ்ஞானபீடப் பரீட்சைகள்
# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ஏப்ரல் 22 ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த விஞ்ஞான பீடத்தின் இரண்டாம், முதலாம் வருடங்களுக்கான பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளன. விஞ்ஞானத்தில் இரண்டாம் தேர்வு **06 - 05 - 1996** திங்கட்கிழமை ஆரம்பமாகும். இதனைத் தொடர்ந்து முதலாம் தேர்வு நடைபெறும். இப்பரீட்சைகள் சாவகச்சேரி, கிளிநொச்சி, வவுனியா ஆகிய இடங்களில் நடைபெறும். மேற்கூறப்பட்ட பரீட்சைகளில் பரீட்சிக்கப்படும் பாடவிதான அலகுகளையும், நேர அட்டவணைகளையும் சாவகச்சேரி / கைதடியில் அமைந்துள்ள பல்கலைக்கழகக் காரியாலயம், கிளிநொச்சி விவசாய பீடம், வவுனியா பல்கலைக்கழகக் கல்லூரி ஆகியவற்றில் பார்வையிடலாம்.

பதிவாளர்
(சி/[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உ_தயன்

## மூன்றாவது முயற்சி!

இராணுவத் தொண்டர் படைக்கு ஆள் சேர்ப்பதற்கான தீவிர ஏற்பாடுகளில் ஸ்ரீலங்கா இராணுவம் ஈடுபட்டுள்ளது. தெற்கின் பல பகுதிகளிலும் இதற்கான நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன.

வடக்கு - கிழக்கு மீதான போரைத் தீவிரப்படுத்துவதற்காகப் படைதிரட்டும் அரசின் மூன்றாவது முயற்சி இது.

சூரியப்பிரகாசம் இராணுவ நடவடிக்கைமுடிந்தகையோடு அந்த வெற்றியைக் காட்டி, சிங்கள இளைஞர்களுக்கு இனவெறியைத் தூண்டி, படைக்கு ஆள் திரட்ட அரசு போட்ட திட்டம் ஏற்கனவே தோல்வி கண்டுவிட்டது.

சூரியப்பிரகாசம் வெற்றிக்குப் பின்னர், காற்றுத் தமக்குச் சாதகமாகவே வீசும் என்று கற்பனை செய்து, அந்தக் காற்றுள்ள போது தூற்றிக் கொள்ள எண்ணியது அரசு! ஆனால் காற்றுத் திசை மாறி வீசுகிறது!

அதனால் நிரந்தர இராணுவ சேவைக்கு ஆள் திரட்டும் முயற்சி தோல்வி அடைந்து போகவே, அரசு, தொண்டர் சேவைக்கு அணி திரட்ட இப்போது முயல்கிறது. இது விடயத்தில் விடா முயற்சியாகச் செயற்படுவது என்று அரசு நினைத்திருக்க வேண்டும்.

சந்திரிகா-அனுருத்த கும்பல் எதிரணியில் இருந்த போது, போரினால் கிராமப்புறத்து ஏழைச் சிங்கள இளைஞர்கள் வீணே களத்தில் மடிந்து போவதாகவும் —

இளம் சந்ததி அழியக் காரணமாக உள்ள இந்தப் போரை நிறுத்தி சமாதானத்தைக் கொண்டு வந்துவிடப் போவதாகவும்— பலத்த குரலில் ஒலித்தனர்.

ஆனால் பதவிக்கு வந்ததும், அதனைக் காற்றில் பறக்கவிட்டுவிட்டனர். போர் மூலம் சமாதானம் என்ற அக்கிரமக் கோட்பாட்டைக் கைவாளாக — கொடுவாளாக— ஏந்தி நிற்கின்றனர்.

இந்தக் கொடுவாள் அப்பாவித் தமிழ் மக்களை மட்டுமன்றி, படையில் சேரும் தங்கள் உயிரையும் குடித்துவிடும் என்பதனை சிங்கள இளைஞர்கள் நடைமுறையில் உணர்ந்துவிட்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சிக் காலத்தில் படையில் சேர்ந்துவிட்டு, உயிருக்குப் பயந்து சொல்லாமல் கொள்ளாமல் 28,000 பேர் விட்டு விட்டு ஓடினார்கள். இப்போது சிங்கள இளைஞர்கள் படையில் சேர்வதற்கே பின்னடிக்கிறார்கள்.

மொத்தத்தில் காற்று மாறி வீசத் தொடங்கியிருக்கிறது. அரசாங்கத்தினால் அது நினைத்தது போல தூற்றிக் கொள்ள முடியவில்லை. ஆயினும் அரசு முயற்சியைக் கைவிடுவதாக இல்லை.

படைக்கு ஆள்திரட்டும் விடயத்தில், அரசு, விடாக்கண்டனாக நிற்பது, அதன் போர்க்குணத்தையும், போரை நிரந்தரமாக்கி அதன் மீது தனது ஆட்சியை வலுவாக்கிக் கொள்ளும் நோக்கத்தையும் சந்தேகத்துக்கு இடமின்றி வெளிப்படுத்துகிறது.

இந்த மூன்றாவது முயற்சியும் தோல்வியடையும் பட்சத்தில், சிங்கள இளைஞருக்குக் கட்டாயஇராணுவசேவையை அரசு கொண்டு வரும் என்பது நிச்சயம்.

ஏனெனில், போர் என்ற போர்வையில், இராணுவ ஆட்சியை நிலைநிறுத்தி, சர்வாதிகாரியாகி தமது பதவியைத் தக்க வைத்துக் கொள்ள சந்திரிகா நன்றாகத் திட்டமிட்டுள்ளார்!

# சிங்கள பேரினவாத அரசியலின் போலி முகத்தை உ_லகறிய செய்வதே தமிழரின் இன்றைய தேவை

## கையொப்பம் சேகரிக்கும் இயக்கத்துக்கு ஆதரவு வழங்கக் கோரிக்கை

**ஸ்ரீலங்கா அரசின் ஒடுக்குமுறைகளுக்கு ஆளாகும் தமிழ் மக்களது அபிலாசைகளை சர்வதேச அமைப்புக்களுக்கு எடுத்து இயம்பும் வகையில், யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புகளின் இணையம் எதிர்வரும் 18ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை 5லட்சம் பேரின் கையொப்பங்களைச் சேகரிக்கும் இயக்கம் ஒன்றை ஆரம்பிக்க உள்ளது.**

**இது தொடர்பாக வெகுஜன அமைப்புக்களின் இணையம் விடுத்துள்ள அறிக்கை இங்கே தரப்பட்டுள்ளது.**

தமிழ் மக்களின் எண்ணங்களை —

விடுதலைப் போரில் மக்களின் உணர்வுகளை நேரடியாக வெளிக்காட்டுவதற்கான கையொப்ப இயக்கமொன்றை நடத்த வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் திட்டமிட்டுள்ளது.

இவ்வாறு பெற்றுக்கொள்ளும் பெறுமதியான கையொப்பங்கள் ஸ்ரீலங்கா ஜனாதிபதிக்கும், ஐ. நா. பொதுச் செயலாளருக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இவ்வியக்கம் பெற்றுத்தரப் போகும் விளைவுகள் என்ன? அதற்கு மக்கள் ஆற்றும் கடமைகள் என்ன? என்பது இங்கு முக்கியமானது.

மக்கள் தமது சுயவிருப்புடனும், தமது தெளிவான சிந்தனையுடனும், கையொப்பம் இடும் தாளில் காணப்படும் பிரகடனத்தை வாசித்து கையொப்பம் இடும் போதும் --

அதை உலக நாடுகள், அறிந்துகொள்ளும் போதும்—

ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது தொடுக்கும் யுத்தத்தையும் அழிப்பையும், எமது பிரச்சினையை அணுகும் விதத்திலான போலித்தனத்தையும் உலகறியும்.

எமது நியாயமான உரிமைகளைப் பெறுவதற்காக நாம் போராடுகின்றோம் என்ற உண்மையை உலகறிய எமது இவ்வாறான செயற்பாடுகள் பெரிதும் அடிப்படையாக அமைகின்றன. அத்துடன் கொழும்பிலிருந்து தமிழருக்காக நீலிக் கண்ணீர் வடித்து தமிழர் பிரதிநிதிகளாகத் தம்மைக் காட்டி எமது அவலங்களைத் தமது சுகபோகத்துக்கான மூலதனமாகக் கொண்டுள்ள போலி அரசியல்வாதிகளின் தன்மையை உலகுக்குக் காட்டிக் கொடுக்கும்.

ஸ்ரீலங்காவுக்கு உதவும் வெளிநாடுகளும் குறிப்பாகத் தமிழ் மக்களின் பண்பாட்டுத் தாயகமென ஒரு காலத்தில் நாம் நம்பியிருந்த இந்தியாவும் உண்மையை இனியும் உணராதிருக்க முடியாத நிலை ஏற்படும்.

இத்தகைய விளைவுகள் எமது சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தவும், ஸ்ரீலங்காவின் ஒடுக்குமுறையிலிருந்து நிரந்தர விடுதலை பெறவும் பெரிதும் உதவிடும்.

இத்தகைய பெரும் பயன்களை அளிக்கவல்ல இக் கையெழுத்து இயக்கத்தை முன்னின்று நடத்த வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் முன் வந்தாலும் இது இந்த அமைப்பினால் மட்டும் செய்து முடிக்கக் கூடிய காரியமல்ல. பொதுமக்கள் அனைவரும் தாமாக முன்வந்து சுயவிருப்பத்துடன் கையொப்பமிட்டு உதவ வேண்டும். அண்மையில் நடைபெற்ற மனித சங்கிலிப் போராட்டம் நல்ல விளைவுகளைப் பெற்றுத் தந்த போதிலும் அதன் தொடர்ச்சியாக இது அமைய வேண்டும்.

இத்தகைய போராட்டங்களின் நன்மை, தீமைகள் அனைவரையும் ஒரே விதத்தில் தான் பாதிக்கின்றன. எனவே அனைத்து வயது வந்தவர்களும் பங்கு பற்றும் கையெழுத்து இயக்கம் மிகுந்த பயனுள்ளதாக அமைய அனைவரும் இதில் இணைவது அவசியம்.

அத்தகைய ஒரு பெரும் பணியைக் காலம் தவறாது உலகம் வியக்கும் வகையில் ஒழுங்காகச் செய்து முடிக்கப் பெரும் எண்ணிக்கையிலான தொண்டர்கள் (உதவியாளர்கள்) தேவை.

இவர்களுக்கு சர்வதேசம் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் கையெழுத்துச் சேகரிப்பது பற்றிய அறிவுறுத்தல்கள் அளிக்கப்பட்டுள்ளன. அவ்வறிவுறுத்தல்களுக்கு அமைவாக இத் தொண்டர்கள் செயற்பட வேண்டும். இந்த இயக்கத்தின் முதுகெலும்பாக இருக்கப் போகிறவர்கள் இத் தொண்டர்களே.

ஆகவே இக் கையொப்பம் இடுவதற்காக அமைக்கப்பட்ட கையொப்ப இயக்கத்திற்கு தமிழ் மக்கள் அனைவரும் தமது ஒருங்கிணைந்த உள்ளத்து உணர்வுகளை கையொப்பம் இடுவதன் மூலம் வெளிக்காட்டி சிங்கள பேரினவாத அரசியல் போலி முகத்தை உலகறியச் செய்வதே தமிழ் மக்களின் இன்றைய தேவையின் அவசியமாகும். (இ)

## அனைத்துலகத்திற்கும் ஒரு பகிரங்கப் பிரகடனம்

தமிழர்களாகிய நாம் நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட ஒரு மக்கள் சமூகம் வரலாற்று ரீதியாக அமையப்பெற்ற எமது தாயக மண்ணில் நாம் வாழ்ந்து வருகிறோம்.

தனித்துவமான மொழி, பண்பாடு, வரலாறு, பொருளாதார வாழ்வு, வரையறுக்கப்பட்ட தாயகம் ஆகிய விசேட பண்புகளைக்கொண்ட நாம் ஒரு தேசிய இனக் கட்டமைப்பை உடையவர்கள். ஒரு தனித்துவமான தேசிய இனம் என்ற ரீதியில் நாம் சுயமரியாதையுடன், சுதந்திரமாக, கௌரவமாக எமது தாயகத்தில் வாழ்வதற்கு எமக்கு உரிமையுண்டு.

அந்நிய காலனித்துவப் பிடியிலிருந்து இலங்கைத்தீவு விடுபட்ட காலத்திலிருந்து, மாறி மாறி ஆட்சி பீடம் ஏறிய சிங்கள அரசுகள் எமது அடிப்படையான வாழ்வுரிமைகளை மறுத்து வந்தன. எமது தனித்துவமான தேசிய வாழ்வை சிதைப்பதற்கு முயன்றன. இந்த அரச ஒடுக்கு முறையானது மிகவும் கொடூரமான இன அழிப்பு வடிவமெடுத்து.

மறுக்கப்பட்ட எமது உரிமைகளை மீட்டெடுக்கவும், இன அழிவிலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ளவும் நீண்ட காலமாகவே நாம் போராடி வருகின்றோம். அகிம்சை வழியிலும் நாடாளுமன்ற அரசியல் மார்க்கமாகவும் நாம் நிகழ்த்திய போராட்டங்கள் அரசின் ஆயுத வன்முறையால் நசுக்கப்பட்டன. இதனால் இறுதியில், எமது அரசியல் சுதந்திரத்தை நிலைநாட்ட ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய நிர்ப்பந்தம் எழுந்தது. இந்த சுதந்திரப் போராட்டத்தை முன்னின்று நடத்துபவர்கள் விடுதலைப் புலிகளே. எமது உரிமைக்காகப் போராடும் விடுதலைப் புலிகளே எமது ஏக பிரதிநிதிகள் என்பதை இத்தால் பிரகடனம் செய்கிறோம்.

எமது தாயக மண்ணை ஆக்கிரமித்து எம்மைக் கொன்றழிக்கும் சகல செயற்பாடுகளையும் சிறிலங்கா அரசு உடன் நிறுத்தி, எம்மை எமது சொந்த மண்ணில் நிம்மதியாக வாழவிடுமாறும் எமது அரசியல் தலைவிதியை நாமே நிர்ணயித்துக் கொள்ள அனுமதிக்குமாறும் தமிழ் மக்களாகிய நாம் மீண்டும் உரத்த குரலில் கேட்டுக்கொள்கின்றோம்.

**அனைத்துலகத்திற்கும் ஒரு பகிரங்கப் பிரகடனமாக அனுப்பப்படவுள்ள கையொப்பப் படிவம் பின்வருமாறு அமையும்:**

| இல | பெயர் | சொந்த முகவரி | தொழில் | ஒப்பம் |
|---|---|---|---|---|
| 01. | | | | |
| 02. | | | | |
| 03. | | | | |
| 04. | | | | |
| 05. | | | | |

**உண்மை உணர்வின் உறுதிப்படிவம்**

**உலகம் வியக்க இடுவீர் ஒப்பம்**

## விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

சாவகச்சேரி, ஏப். 17

தேசிய தொழிற் பயிற்சித் திட்டத்தின் கீழ், மொறட்டுவவில் உள்ள இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகத்தில் முழு நேரப் பயிற்சி நெறிக்கு பயிலுநர்களைச் சேர்ப்பதற்கும்-

கல்விக் கல்லூரிகள், ஆசியர் பயிற்சிக் கலாசாலைகள் தேசிய பாடசாலைகளில் இரசாயன கூட உதவியாளர் பதவிகளுக்கும்—

விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தொழிற் பயிற்சிக்கு விண்ணப்பிப்போர் ஜி.சீ.ஈ. சாதாரண தர பரீட்சையில் தமிழ், கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். வயதெல்லை: 16 முதல் 23 வரை.

இரசாயன கூட உதவியாளர் பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் ஜி. சீ.ஈ. சாதாரண தர பரீட்சையில் விஞ்ஞானம், கணிதத்தில் திறமைச் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். வயதெல்லை; 18 முதல் 24 வரை.

இவைதொடர்பான வர்த்தமானி அறிவித்தல்களின் பிரதிகளை சாவகச்சேரி நவீன சந்தை மேல்மாடி, பருத்தித்துறை பஸ் நிலைய சதுக்கம், கிளிநொச்சி வை.எம். சி. ஏ. கட்டடம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள உதயன் பணிமனைகளில் பார்வையிடலாம். விண்ணப்பப்படிவங்களையும் அங்கு பெற்றுக் கொள்ளலாம். (அ)

## பேராயருக்கு பாராட்டு விழா

கிளிநொச்சி, ஏப். 17

தென்னிந்திய திருச்சபை யாழ், அத்தியட்சாதீன முன்னாள் பேராயர் அதிவண டி.ஜே. அம்பலவாணருக்கு தமிழ்நாடு செரம்பூர் பல்கலைக்கழகம் கலாநிதிப் பட்டம் வழங்கி உள்ளது.

இது தொடர்பான பாராட்டுவிழா தென்னிந்திய திருச்சபை பேராயத்தினால் கிளிநொச்சி தென்னிந்திய திருச்சபை தேவாலய வளாகத்தில் கடந்த புதன்கிழமை நடத்தப்பட்டது.

இந்த வைபவத்தில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு.எஸ்.தில்லைநடராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்தினார்.

தென்னிந்திய திருச்சபை செயலாளர் வண றொபேர்ட் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

தற்போதைய நெருக்கடியானகாலகட்டத்திலும் பேராயர் இந்த மண்ணில் தங்கி இருந்து ஆற்றிவரும் சேவைகளைப் பாராட்டி பலரும் உரைநிகழ்த்தினர்.

(இ-124)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பதவி உயர்வுக்கு போட்டிப் பரீட்சை நடக்கும்

சாவகச்சேரி, ஏப். 17

இலங்கை ஆசிரியர் சேவை முதலாம் வகுப்புக்கு தரம் உயர்த்தப்படுவதற்கான போட்டிப் பரீட்சைக்கு அரசாங்க சேவை ஆணைக் குழுவின் கல்விச் சேவைக் குழு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இலங்கை ஆசிரியர்சேவைப் பிரமாணக் குறிப்பின் III ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய வேதரம் உயர்வு வழங்கப்படும்.

பயிற்றப்பட்ட அல்லது பட்டதாரி ஆசிரியராக 22 வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்து தொழிற் தகைமையுடைய பட்டதாரி ஆசிரியர்களும் —

பயிற்சி பெற்ற ஆசிரியர்களாக 25 வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள ஆசிரியர்களும் — விண்ணப்பிக்க முடியும்.

இந்த சேவைக் காலத்தை 06-10-94 இல் பூர்த்தி செய்திருத்தல்வேண்டும் என்றும்— விண்ணப்பங்கள் அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும் என்றும்— கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலின் பிரதியை சாவகச்சேரி நவீன சந்தை கட்டடம், பருத்தித்துறை பஸ் நிலைய சதுக்கம், கிளிநொச்சி வை.எம்.சீ.ஏ. கட்டடம் ஆகியவற்றில் இயங்கும் உதயன் பணிமனைகளில் பார்வையிடலாம்.


## தமிழ் இனத்தின்துன்பதுயரங்களை வெளியுலகிற்கு தெரியப்படுத்தல்

சிறிலங்கா இராணுவ நடவடிக்கையினால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள நெஞ்சை உருக்கும் சம்பவங்களை வெளியுலகிற்கு தெரியப்படுத்த வெரித்தாஸ் வானொலி தமிழ்ப்பணி முன்வந்துள்ளது. இச்சந்தர்ப்பத்தில் இம்மண்ணின் அவலங்களை, துயர நிகழ்வுகளை நீங்கள் கட்டுரைகளாக எழுதுவதன் மூலம் எமது மண்ணின் துயரை உலக நாடுகளுக்குத் தெரியப் படுத்துவதுடன் ஐ. நா. சபைக்கும், மற்றும் மனித உரிமை அமைப்புக்களுக்கும் எங்கள் நீதியைத் தெரியப்படுத்த இது ஓர் சந்தர்ப்பமாகும்.

உங்கள் ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

வெரித்தாஸ்
வாசகர் வட்டம்,
இல. 542,
C/.o உதயன் பணிமனை,
சரசாலை,
சாவகச்சேரி.

வெரித்தாஸ்
வாசகர் வட்டம்
விளம்பர இல. 2,
C/o .உதயன்
கிளிநொச்சி கிளை நிலையம்,
Y. M. C. A. கட்டடம்,
கிளிநொச்சி.

(சி/4184)


## மரண அறிவித்தல்கள்

### கந்தையா பசுபதிப்பிள்ளை

சரவணை கிழக்கை வசிப்பிடமாகக் கொண்ட கந்தையா பசுபதிப்பிள்ளை நேற்று (16-04-96) இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா — பொன்னம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், தேவநாதன், குணநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், வளர்மதி, மஞ்சுளா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், செந்தூரன், தேவகி, ஜானகி, பயிரவி, அனுஷன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-4-96) 2. 00 மணியளவில் சாவகச்சேரி சப்பச்சிமாவடியில் நடைபெறும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தேவநாதன்
(மகன்)

தற்போதைய முகவரி:-
ப. தேவநாதன்,
சாவகச்சேரி சப்பச்சிமாவடி.

(41545)

### டாக்டர் நாகலிங்கம் ராஜநாதன்

மானிப்பாய் பூம்பந்தல் வளவைப் பிறப்பிடமாகக் கொண்டவராகிய டாக்டர் ராஜநாதன் 16-04-96 இல் சிவபதம் எய்தினார்.

இவர் காலஞ்சென்ற நாகலிங்கம் — அன்னம்மா ஆகியோரின் அன்பு மகனும், புவனேஸ்வரி, மங்கையர்க்கரசி, பாலசிங்கம் (சிராலியோன்), சிவபாக்கியம் (லண்டன்), சண்முகநாதன் (கொழும்பு), ராஜதேவி, சரஸ்வதி (லண்டன்), இந்திராணி (அமெரிக்கா), சற்குணதேவி, பற்குணராஜா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரங்கநாதன் (யாழ். மாநகர சபை), காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை (இலங்கை வங்கி,பருத்தித்துறை), ஜெயலிங்கம் (லண்டன்), காலஞ்சென்ற மயில்வாகனம் (ஓடிற் ஓவ் வீஸ்சர், மஸ்கன் முகாமையாளர்),புஸ்பராஜசிங்கம்(லண்டன்), அன்னலட்சுமி (சிராலியோன்), ராஜேஸ்வரி, மதனா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-4-96) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெறவுள்ளன, இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறேன்.

தகவல்:
P. சற்குணதேவி

தற்காலிக முகவரி:-
நாமகள் கலாமன்றம்,
தம்பசிட்டி,
பருத்தித்துறை,

(40440)

# ஆயுதக் கப்பலைத் தாக்குவதே புலிகளின் இலக்காக இருந்ததா?

## விசாரணைகள் நடைபெறுகின்றன

கொழும்பு, ஏப். 17

ஆயுதங்கள் மற்றும் இரு ஹெலிக்கொப்டர்கள் ஆகியவற்றுடன் வியாழன்று கொழும்புத் துறை முகத்தில் நின்ற கப்பலை நாசமாக்குவதே விடுதலைப் புலிகளின் இலக்காகவிருந்ததா என்பது குறித்து விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சிலாபம் முதல் கற்பிட்டி வரையான கடற்கரைப் பகுதியில் இருந்துதான் விடுதலைப்புலிகளின் தாக்குதல் பிரிவு வந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கப்படுவதால், அப்பகுதிகளில் வாழும் மக்களிடம் பொலீஸார் தகவல்களை கோரியுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

(இ-3)

## நிலுவையுடன் ஒய்வூதிய கொடுப்பனவு

சாவகச்சேரி, ஏப். 17

ஓய்வூதியர்களுக்கான மார்ச் மாதத்துக்கான ஓய்வூதிய வவுச்சர்களும், காசோலைகளும் சென்ற முறை வழங்கப்பட்டதைப் போன்றே இம் முறையும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஓய்வூதியக் கிளைக் கணக்காளர் கா. வீரசிங்கம் தெரிவித்துள்ளனர்.

இம் முறை ஓய்வூதியத்துடன் 1992 வருடத்தின் முன் ஓய்வு பெற்ற ஓய்வூதியர்களில், வாழ்க்கைச் செலவுப் படியைப் பெற தகுதியுடையவர்களுக்கான 1560 ரூபாவும் சேர்த்து வழங்கப்பட உள்ளது.

தமது தற்காலிக முகவரியை ஓய்வூதிய கிளையில் வழங்கியிருக்கும் ஓய்வூதியர்களும் சென்ற மாத ஓய்வூதியம் எடுத்ததைப் போன்று தமது தபால் நிலையங்களிலேயே வவுச்சர்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-8)

## ஸ்ரீமாவோவுக்கு 80 வயது

கொழும்பு, ஏப். 17

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் 80 ஆவது பிறந்த தினமான இன்று தெற்கில் விரிவான கொண்டாட்டங்கள் இடம் பெறவுள்ளன.

(இ-3)

## அரச அதிபர் கொழும்பு பயணம்

சாவகச்சேரி, ஏப். 17

யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் நேற்று பருத்தித்துறையில் இருந்து புறப்பட்ட ஹபரண கப்பலில் கொழும்பு பயணமானார்.

எதிர்வரும் 22 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள அத்தியாவசிய சேவைகள் இணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகவே அவர் கொழும்பு பயணமானார். (இ-815-173)

## இன்று முதல்.,.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டுகள் கடந்த மாதத்துக்கு முன்பிருந்து ஆரம்பமாகியிருந்தன.

இன்று புதன்கிழமை தொடக்கம் சகல வகுப்புகளும் முழுமையாக நடைபெறும் எனக் கல்வி வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-173)

## இ.தொ.க.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்காவை சமரசப் பேச்சுக்காக நியமித்திருந்தார்.

நேற்று இது தொடர்பாக அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்காவுடன் நடந்த பேச்சுக்கள் தோல்வியடைந்து விட்டதாகவும் —

எமது கோரிக்கைகளில் இணக்கம் ஏற்படாததால் திட்டமிட்டபடி வேலை நிறுத்தம் நடைபெறும் என்றும் — ... தெரிவித்தார்.

(இ-3-6)

## இடம்பெயர்ந்த ஓய்வூதியர்: 2 மாத கொடுப்பனவுகள்

### இன்று முதல் வழங்கப்படும்

கிளிநொச்சி, ஏப். 17

இடம் பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் தமது பெயர்களைப் பதிவு செய்த உள்ளூராட்சி ஓய்வூதியர்களின் மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான ஓய்வூதியக்கட்டுநிதி செயலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளதாக செயலகக் கணக்காளர் திரு. அ. பாலகுமார் தெரிவித்தார்.

இந்த ஓய்வூதியர்களின் மார்ச், ஏப்ரல் மாத ஓய்வூதியக் கொடுப்பனவுகள் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் வழங்கப்படுமென்றும் அவர் கூறினார்.

இதற்கிடையில் வலிகாமத்தில் இருந்து இடம் பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் தங்கி இருக்கும் ஓய்வூதியர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவுகளை ஒழுங்காக மேற்கொள்வதில் அரசு அசமந்தப்போக்கினைக் கடைப்பிடித்து வருகிறது என்றும்—

இதனால் இடம் பெயர்ந்த ஓய்வூதியர்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளார்களெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இடம் பெயர்ந்தவர்களின் ஒய்வூதியக் கொடுப்பனவுகளை ஒவ்வொரு மாதமும் உரிய திகதியில் வழங்க ஆவன செய்யுமாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரப்பட்டுள்ளது.

## தமிழரை ஒதுக்கிவிட்டு ஆட்சி செய்ய முடியாது

### சந்திரிகா கூறுகிறார்

கொழும்பு, ஏப். 17

தமிழ் மக்களை ஒதுக்கிவிட்டு ஆட்சி செய்யமுடியாது. அவர்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இப்படிக் கூறியுள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

அங்குரஸவில் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டுமக்கள் அச்சமின்றியும், தன்னம்பிக்கையுடனும் வாழ்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுப்பதும்—

சகல இனத்தவர்களும் சகோதரர் போல சமமான உரிமைகளுடன் சமாதானமாகவும்வும், அன்னியோன்னியமாகவும் வாழக் கூடிய சமுதாயத்தை ஏற்படுத்திக் கொடுப்பதுமே எமது லட்சியமாகும்.

கடந்த காலத்தில் இடம் பெற்ற பயங்கரவாதமும், வன்செயல்களும் இனிமேல் இந் நாட்டில் ஏற்பட இடமளிக்கக் கூடாது.

தற்போதைய தமிழ் இனத்தின் பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வு காணமுடியாது. அரசியல் தீர்வு ஒன்றின் மூலமே இப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும் என்று அவர் கூறினார். (இ-3)

## வடக்கின் கல்வி துறையில் சீர்திருத்த நடவடிக்கைகள்

### புதிய செயலாளர் முயற்சி

சாவகச்சேரி, ஏப்: 17

வடக்கு - கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் பதவியை ஏற்றுள்ள திரு. சுந்தரம் டிவகலாலா கல்வித்துறையில் பல சீர்திருத்தத் திட்டங்களை செயற்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இது தொடர்பாக அவர் தமது அமைச்சு அதிகாரிகளுடன் ஆராய்ந்து வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையை நீக்கவும், தளபாடப்பிரச்சினைகளை தீர்க்கவும், நிர்வாகப் பரவலாக்கல் திட்டத்தை செயற்படுத்தவும் தமது சீர்திருத்தத் திட்டத்தில் முன்னுரிமை வழங்க அவர் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சி, தென்மராட்சி, வன்னிப்பகுதியில் உள்ள இடம் பெயர்ந்த பாடசாலைகளை முழுமையாக இயங்கச் செய்ய வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர் தமது அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (இ-3)

## முதலுதவி கொடி தினம்

சாவகச்சேரி, ஏப். 17

அவசரகால முதலுதவிச் சேவையை மேலும் விஸ்தரிக்கும் நோக்குடன், அவசரகால முதலுதவிச் சங்கம் கொடித் தினத்தை நேற்றுமுன்தினம் ஆரம்பித்துள்ளது.

ஆரம்ப சுகாதார, முதலுதவிப்பயிலுநர்களை உருவாக்கவும்—

ஆரம்ப சுகாதார, முதலுதவி அறிவினை மக்கள் மத்தியில் தெளிவுற விளக்கவும்—

ஆரம்ப சுகாதார, முதலுதவி சிகிச்சை நிலையங்களை அமைக்கவும்—

நோயாளர் போக்கு வரத்துச்சேவையை (அம்புலன்ஸ்) விஸ்தரிக்கவும்—நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள இக் கொடிதினம் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை நடைபெறும்.

இதற்காக சகலரும் உதவிடும்படி அச் சங்கம் மக்களை கோரியுள்ளது. (இ-3)

(இ-124)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை(?)யில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 17-04-96 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org